www.tamilarangam.net

# தமிழ் ஈழ விடுதலை இயக்கம்
# Tamil Eelam Liberation Organization



தமிழீழ மக்களின் விடுதலைக்கு வழிகாட்டியாக முதன்முதலாக ஆயுதம் ஏந்திய போராட்டப்பாதையை தெரிவுசெய்தவர்கள் நாம். அதாவது எமது தமிழீழ விடுதலை இயக்கமே (ரெலோ) முதன்முதல் தோன்றிய இயக்கமாகும். எமது தேசபிதா தங்கத்துரையும் தளபதிகுட்டிமணியும் சிறிலங்கா அரசுக்கு சிம்ம சொப்பனமாக விளங்கியவர்கள். "நாம் வன்முறை மீது காதல்கொண்ட மனநோயாளிகள் அல்ல" என்று சிறிலங்கா நீதிமன்றத்தில் நின்று கர்ச்சித்த தேசபிதா தங்கத்துரையின் உரையானது தமிழீழப் போராட்டப் பாதையில் வரலாற்றுச் சிறப்பு மிக்கதொன்று. அந்தத் தலைமைகளை அன்று பொலிஸிடம் காட்டிக்கொடுத்து இயக்கத் தலைமையை கைப்பற்றும் நோக்கில் போராட்டப் பாதைக்கு துரோகம் இழைத்தவர்தான் இன்று தன்னைத்தானே தேசியத் தலைவர் என்று பீற்றிக்கொள்ளும் பிரபாகரன் ஆவார்.

இந்த துரோகத்தனத்தால் எமது மூத்த தலைமைகளை நாம் வெலிக்கடைப் படுகொலையில் இழந்தபோதும் எம்மைத் தொடர்ந்து வழிநடத்த சிறிசபாரெட்ணம் என்றழைக்கப்படும் சிறீ அண்ணா வரலாற்றுப் பாத்திரம் ஏற்றார். அவர் தலைமையில் எமது இயக்கம் வீறுநடை போட ஆரம்பித்தது. இன்றுபோல் நவீன ஆயுத வசதிகள் இல்லாத அந்த எண்பதுகளில் சிறி அண்ணாவின் வழிகாட்டலில் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தைத் தாக்கி அழித்தமை ஒவ்வொரு தமிழீழப் பிரசையையும் மெய்சிலிர்க்க வைத்தது என்பதை யாரும் மறந்துவிட மாட்டார்கள். ஆனால் எமது வளர்ச்சியினை பொறுத்துக் கொள்ள மாட்டாத புலிகள் 1986 இல் எமது இயக்கத்தைத் தடைசெய்து எமது போராளிகளையும் தலைமையும் கொன்றொழித்தனர். கரிபடிந்த அந்த நாட்கள் (ஏப்ரல் 26-29) ஒவ்வொரு வருடமும் எம் நெஞ்சை விட்டகலாதவை.

காட்டிக்கொடுப்பிலும் கொலைவெறியிலும் போராட்டத்தைத் தொலைத்து நிற்பது புலிகளின் தலைமையே என்பதை தமிழீழ மக்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். சக இயக்கங்களை கொன்றொழித்தமையும் இந்தியாவை பகைத்துக் கொண்டமையும் முஸ்லிம் சகோதரர்களை போராட்டத்தை விட்டே துரத்தியடித்தமையும் எமது தமிழீழம் எனும் நோக்கினை பல வழிகளிலும் சீர்குலைத்தது. இறுதியாக புலிகள் தமது சொந்த இயக்கத்துக்குள்ளேயே வடக்கு கிழக்கு என்று பிரதேச ஆதிக்கத்தை வளர்த்துவிட்டதன் மூலம். எல்லாவழிகளிலும் தமிழீழத்தை குற்றுயிராக்கி கொன்று முடித்திருக்கின்றனர். கிழக்கு மாகாண போராளிகள் பிரிந்துசெல்லும் அளவுக்கு பிரபாகரனின் தலைமை முரட்டுத்தனமாக நடந்துகொண்டதன் மூலம் வடகிழக்கு இணைந்த தமிழீழத் தாயகம் எனும் உயர்ந்த நோக்குக்கு ஆப்பு வைத்துள்ளனர். இன்று கிழக்கில் இயக்க வேறுபாடுகள் இன்றி முன்னாள் போராளிகள் அனைவரையும் புலிகள் கொல்லத்தொடங்கியுள்ளனர்கள். இதனை நாம் கடுமையாகக் கண்டிக்க வேண்டிய வரலாற்றுக்கடமை நமக்கு உண்டு. சமாதான ஒப்பந்தத்தின் பின்னரும் கூட எமது ரெலோ இயக்கப் போராளிகள் பலர் கிழக்கு மாகாணத்தில் புலிகளால் கொலை செய்யப்பட்டுள்ளனர். ஆனால் எமது இயக்கத்தினை வழிநடத்தும் போலித்தலைமைகள் நமது பாராளுமன்ற ஆசனங்களை காத்துக்கொள்ளும் கைங்கரியத்துக்காக இறைச்சியைத் தின்று எலும்பை வீசும் பிரபாகரனின் கால்களில் தவம் கிடக்கின்றனர்.

* *இந்தியாவில் கெரில்லா பயிற்சித் தளங்கள் இருந்த காலங்களில் எமது அந்த தளங்களை பெருமளவில் நிறைத்திருந்தவர்கள் கிழக்கு மாகாணப் போராளிகளே என்பது நாம் நினைத்துப் பார்க்கவேண்டும். ஆனால் எந்தவொரு இயக்கத்திலும் அந்த பிரதேசப் போராளிகளுக்கு உரிய பொறுப்பு மிக்க தரங்கள் வழங்கப்பட்டனவா? என்ற வினாவுக்கான பதில் என்ன?*

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*   *எமது ரெலோ இயக்கத்தினை புலிகள் தடைசெய்தபோது கிட்டுவால் கொலைசெய்யப்பட்ட போராளிகளில் தொண்ணூறு வீதமானவர்கள் கிழக்கைச் சேர்ந்தவர்களே என்பதை யாராவது மறுக்கமுடியுமா?*

*   *ரெலோ அழித்தொழிப்பில் மட்டக்களப்புக்கு சென்ற பொட்டம்மானின் கொலையாளிகள் கொக்கட்டிச்சோலை என்னும் இடத்தில் ரெலோ பொறுப்பாளர் நெவில் தலைமையிலான 19 போராளிகளை அவர்கள் சரணடைந்த நிலையில் கொன்றொழித்தன். அந்த கொலைகளை நிறைவேற்றிய குமரப்பா, நியூட்டன் போன்றோருடன் முரண்பட்டு புலிகளின் மட்-அம்பாறை பொறுப்பாளர் "கடவுள்" வெளியேறியதை நாம் நினைவில் கொள்ளவேண்டும்.*

இப்படியெல்லாம் நமது இயக்கம் கொன்றொழிக்கப்படுகையில் அதிக இழப்பை எதிர்கொண்டவர்கள் கிழக்கு போளிகளே என்ற உண்மையில் நமக்குள் நாமே பிரதேச ரீதியாக ஆதிக்கம் செலுத்தியுள்ளோம் என்பதை இனியாவது ஒப்புக்கொண்டேயாக வேண்டும்.

புலிகளது ரெலோ மீதான தடை எல்லாவழிகளிலும் நிறைவேறிய பின்பு குறிப்பிட்ட கால இடைவெளியின் பின்னர் எமது இயக்கம் மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்டது கிழக்கு மண்ணில்தான் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. கருணாகரன் என்கின்ற ஜனா தலைமையில் எஞ்சியிருந்த கிழக்குப் போராளிகளே ரெலோவுக்கு உயிரூட்டியவர்கள்.

முதன்முதலில் தமிழீழ விடுதலை இயக்கத்துக்கு இரண்டு பாராளுமன்ற பிரதிநிதிகளைத் தந்தவர்கள் கிழக்கு பிரதேச மக்களே. திவ்வியநாதன், கோவிந்தன் கருணாகரன் போன்றோரின் பாராளுமன்ற பிரநிதித்துவ அந்தஸ்தே மீண்டும் ரெலோவானது இலங்கையில் ஒரு முக்கியத்துவம் வாய்ந்து அமைப்பாக உருவாக காரணமாயிற்று ஆனால் அவர்கள் எல்லாம் தங்களைத் துரத்திய துரோகிப் பட்டங்களுக்கு பயந்து ஓடி ஒதுங்க நேரிட்டது. ஆனால் இன்று செல்வம் அடைக்கலநாதன் போன்றோர் நமது ரெலோ போராளிகள் இன்னுயிரை ஈந்து விதைத்ததன் விளைச்சலை பாராளுமன்றக் கதிரைகளாக புலிகளின் ஆசீர்வாதத்துடன் அறுவடை செய்துள்ளனர். இது எப்படித் துரோகமற்றதாகும்? கிழக்கு பிரதேசத்தில் நமது இயக்கத்தின் தனித்துவ செயற்பாட்டினை காப்பாற்றிக்கொள்ள போராடியவர்கள் எல்லாம் துரோகி என்றால் வடக்குப்பிரதேசத்தில் மட்டும் பாராளுமன்றக் கதிரைகள் அங்கீகரிக்கப்படுவதன் சூட்சுமம் என்ன? எமது இயக்க சுயமரியாதையை அடகு வைத்து விட்டு கிளிநொச்சியில் தமிழ்செல்வன் நடத்தும் பாராளுமன்றத்துக்கு ஒழுங்கு தவறாமல் ஆஜராகுவதற்கா எமது தலைமைகளும் போராளிகளும் ஆகுதியாகினர். தமிழர் தேசிய கூட்டமைப்பின் ஒற்றுமை என்பது அதில் பங்கெடுக்கின்ற நமது ரெலோ இயக்கப் போராளிகளை மட்டக்களப்பில் துரோகக் குற்றச்சாட்டில் புலிகள் கொன்று வீசுவதை அனுமதித்துக் கொண்டு அமைதி காப்பதல்ல.

இன்னும் புலிகளது உயிர்பறிப்பு கிழக்கில் உள்ள எமது இயக்கப்போராளிகளை விட்டுவைப்பதாய் இல்லை. மண்முனைப்பற்று பிரதேச சபை சேர்மனாய் இருந்த றொபேட் (இவர் மத்திய குழு உறுப்பினரும் தலைமைக்குழு உறுப்பினருமாவார்.) சிவா, கண்ணாத்தி என்கின்ற வாழைச்சேனைப் பகுதியைச் சேர்ந்த ஊனமுற்ற போரளிகள், புஸ்பன், அன்வர், சீலன், பேட்டோ (இவர் செங்கலடி பிரதேசசபை சேர்மனும் மத்தியகுழு உறுப்பினருமாவார்) ............................ என்றவாறாக கிழக்கில் தொடரும் கொலைகளுக்கு ஒரு வார்த்தை தன்னும் கேட்கமுடியாத செல்வம் அடைக்கலநாதன் நமது இயக்கத்தின் தலைமை எனும் மணிமுடிக்கு தகுதியானவர்தானா?

சொந்த பதவி சொத்துக்காக எமது கிழக்குப் போராளிகளை காக்க வக்கற்ற இந்த மௌனம் தொடருமானால் நாளை ரெலோவில் இருந்தும் கிழக்குப் பிரிவு ஒன்று உதயமாகலாம். அதன் விளைவுகளை இன்றுள்ள தலைமைகளே பொறுப்பேற்கவேண்டி வரும். அது கொல்லப்பட்ட எமது தலைவர் சிறிசபாரெட்ணம் மற்றும் ஆயிரக் கணக்கான போராளிகளின் மரணங்களை அர்த்தமற்றதாக்குவதாகவே முடியும்.

வாழ்க தமிழீழம்!
வளர்க தமிழீழ விடுதலை இயக்கம்

TELO (சிறிசபாரெட்ணம் அணி)
ஐரோப்பிய கிளை
26-04- 2005

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்